பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
13 06 2025 **FRIDAY** 12 40 **PM**
ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. அகமதாபாத் விமான விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு அரசு உறுதுணையாக இருக்கும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. இந்தியா – சீனா இடையேயான நட்புறவை மேம்படுத்த இருநடுகளும் ஒப்புக் கொண்டுள்ளன.

3. ஈரான் மீதான இஸ்ரேல் தாக்குதல் காரணமாக அந்நாடுகளில் வசிக்கும் இந்தியர்கள் விழிப்புடன் இருக்குமாறு வெளியுறவுத்துறை கேட்டுக் கொண்டுள்ளது.

4. நாகப்பட்டிணம் - காங்கேசன்துறை பயணிகள் கப்பல் சேவைக்கான நிதியுதவியை மத்திய அரசு மேலும் ஓராண்டுக்கு நீட்டித்துள்ளது.

5. சீனாவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் சித்தார்த் விஸ்வகர்மா அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

>>>>>><<<<<<

அகமதாபாத் விமான விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு அரசு உறுதுணையாக இருக்கும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

அகமதாபாதில் விமான விபத்து நேரிட்ட இடத்தையும், இந்த விபத்தில் சேதமடைந்த மருத்துவக் கல்லூரி மாணவர் விடுதியையும் பிரதமர் இன்று பார்வையிட்டார்.

விமான விபத்தில் உயிர் தப்பிய ஒருவர் மற்றும் விமானம் மோதியதால் விடுதிக் கட்டிடம் இடிந்ததில், காயமடைந்து அஹமதாபாத் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் மருத்துவக் கல்லூரி மாணவர்களையும் பிரதமர் நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார்.

அவர்களுக்கு அளிக்கப்பட்டு வரும் சிகிச்சை குறித்து, மருத்துவர்களிடமும் அவர் கேட்டறிந்தார்.

பின்னர், மீட்பு மற்றும் சீரமைப்புப் பணிகள் குறித்து விமான போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. ராம் மோகன் நாயுடு, குஜராத் முதலமைச்சர் திரு. பூபேந்திர பட்டேல் மற்றும் உயரதிகாரிகளுடன் பிரதமர் ஆலோசனை நடத்தினார்.

இதுகுறித்து பிரதமர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், நினைத்துப் பார்க்க முடியாத இந்த கோர விபத்து மிகுந்த துயரம் அளிப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தமது ஆறுதலை தெரிவித்துக் கொள்வதாக குறிப்பிட்ட திரு. நரேந்திர மோடி, உயிரிழந்தவர்களின் ஆன்மா சாந்தியடைய பிரார்த்திப்பதாக தெரிவித்துள்ளார்.

**>>>>>><<<<<<**

இந்தியா – சீனா இடையேயான நட்புறவை மேம்படுத்த இருநடுகளும் ஒப்புக் கொண்டுள்ளன.

வெளியுறவுத்துறை செயலாளர் திரு. விக்ரம் மிஸ்ரி, புதுதில்லி வந்துள்ள சீன வெளியுறவுத்துறை துணை அமைச்சர் திரு. **Sun Weidong-**யை சந்தித்து இருதரப்பு உறவில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்து ஆலோசனை நடத்தினார்.

இதுகுறித்து வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் மக்கள் நலன் சார்ந்த பிரச்சினைகளுக்கு முன்னுரிமை அளித்து இருதரப்பு உறவுகளை சீரமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைலாஷ் மானசரோவர் புனித யாத்திரைக்கு சீனா அளித்து வரும் ஒத்துழைப்புக்கு திரு. விக்ரம் மிஸ்ரி பாராட்டு தெரிவித்ததாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

மேலும், பொருளாதாரம், வர்த்தகம் சார்ந்த அம்சங்கள் குறித்து விரிவான பேச்சுவார்த்தை நடத்த இருதரப்பும் ஒப்புக் கொண்டிருப்பதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியா – சீனா இடையிலான நேரடி விமான சேவைகளை மீண்டும் தொடங்குவதற்கான நடவடிக்கைகளை விரைவுபடுத்துவதுடன் விசா நடைமுறைகளை தொடங்கவும் முடிவு செய்யப்பட்டதாக வெளியுறவுத்துறை தெரிவித்துள்ளது.

>>>>>><<<<<<

ஈரான் மீது இஸ்ரேல் நடத்திய விமான தாக்குதலை அடுத்து, இருநாடுகளிலும் உள்ள இந்தியர்கள் பத்திரமாக இருக்குமாறு வெளியுறவுத்துறை அறிவுறுத்தியுள்ளது.

இதுகுறித்து வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் ஈரான் - இஸ்ரேல் இடையேயான மோதல் கவலை அளிப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிலைமை உன்னிப்பாக கண்காணிக்கப்பட்டு வருவதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

இருநாடுகளும் தாக்குதலை தவிர்ப்பதுடன், ராஜ்ஜீய ரீதியிலான பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளுமாறும் மத்திய அரசு, கேட்டுக் கொண்டுள்ளது.

இருநாடுகளுடனும் இந்தியா சிறந்த நட்புறவை பராமரிப்பதால், அமைதியை நிலைநாட்ட தேவையான அனைத்து ஒத்துழைப்புகளையும் வழங்க தயாராக இருப்பதாகவும் வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இருநாடுகளிலும் உள்ள இந்திய தூதரகங்கள், அந்த நாடுகளில் வசிக்கும் இந்திய சமுதாயத்தினரை தொடர்பு கொண்டுள்ளதாகவும், இந்தியர்கள் அனைவரும் பாதுகாப்பு ஆலோசனைகளை பின்பற்றி விழிப்புடன் இருக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளதாக அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, இந்த தாக்குதலால் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழல் காரணமாக, மத்திய கிழக்கு நாடுகளுக்கான விமானப் போக்குவரத்து பாதிக்கப்பட்டதை அடுத்து, தில்லி விமான நிலையத்திலிருந்து ஈரான் - ஈராக் மற்றும் அதன் அண்டை நாடுகளுக்குச் செல்லும் விமானங்களில் பயணம் செய்வோர் சம்பந்தப்பட்ட விமான நிறுவனங்களை தொடர்பு கொண்டு பயணத்தை உறுதி செய்து கொள்ளுமாறு தில்லி சர்வதேச விமான நிலைய அதிகாரிகள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

டெஹ்ரானில் உள்ள ஈரானின் அணுசக்தி நிலையங்கள் மற்றும் ராணுவ உயரதிகாரிகளை குறிவைத்து இஸ்ரேலின் 200-க்கும் மேற்பட்ட விமானங்கள் நேற்றிரவு நடத்திய அதிரடி தாக்குதலில், ஈரான் முப்படைகளின் தலைமை தளபதி மொஹமது பஹேரி, ராணுவ தளபதி ஹூசைன் சலாமி மற்றும் அணு விஞ்ஞானிகள் கொல்லப்பட்டனர். இதனை இஸ்ரேல் ராணுவமும் உறுதிப்படுத்தியுள்ளது.

>>>>>><<<<<<

ஈரான் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில், அமெரிக்காவுக்கு எவ்வித தொடர்பும் இல்லை என்று அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. மார்க்கோ ரூபியோ தெரிவித்துள்ளார்.

இந்த தாக்குதல் இஸ்ரேல் தன்னிச்சையாக மேற்கொண்ட நடவடிக்கை என்றும் அமெரிக்கா இதில் தலையிடவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

இஸ்ரேலின் தற்காப்புக்கு அவசியம் என்பதால், இந்த நடவடிக்கையில் ஈடுபட்டதாக இஸ்ரேல் தெரிவித்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

எனவே அமெரிக்காவுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈரான் ஈடுபடக் கூடாது என்றும் திரு. மார்க்கோ ரூபியோ வலியுறுத்தியுள்ளார்.

>>>>>><<<<<<

வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கர், அர்மேனிய வெளியுறவு அமைச்சர் திரு. **Ararat Mirzoyan-**ஐ சந்தித்து இருதரப்பு ஒத்துழைப்பு குறித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

பிரான்ஸ் நாட்டின் **Marseille** நகரில் நடைபெற்ற இந்த சந்திப்பின் போது பல்வேறு பிராந்திய விவகாரங்கள் குறித்து விவாதிக்கப்பட்டதாக திரு. ஜெய்சங்கர் தமது சமூகவலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

அர்மேனிய அமைச்சருடனான சந்திப்பு, ஆக்கபூர்வமாகவும் பயனுள்ளதாகவும் அமைந்தது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

தமிழகத்தின் நாகப்பட்டிணத்திலிருந்து, இலங்கையின் காங்கேசன் துறைக்கு இயக்கப்படும் பயணிகள் போக்குவரத்துக் கப்பல் சேவைக்கு வழங்கப்படும் நிதியுதவி மேலும் ஓராண்டுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இந்தியா – இலங்கை மக்களுக்கு இடையிலான நட்புறவு மற்றும் பிராந்திய இணைப்பை வலுப்படுத்துவது என்ற மத்திய அரசின் உறுதிப்பாட்டிற்கு ஏற்ப இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் தொடங்கப்பட்ட இந்த கப்பல் சேவையில் இதுவரை 15 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பயணம் செய்திருப்பதுடன், இரு நாடுகளுக்கும் இடையிலான கலாச்சார பொருளாதார மற்றும் சமூக பரிமாற்றங்கள் வலுவடைந்துள்ளது.

இதன்மூலம் பயணிகளுக்கு குறைந்த கட்டணத்தில் கப்பல் சேவை வழங்குவது உறுதி செய்யப்படுவதோடு, சரக்குப் போக்குவரத்தும் மேம்படும் என்று எமது கொழும்பு செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>><<<<<<

தேவார மூவர்களில் ஒருவரான திருஞானசம்பந்தரின் குரு பூஜையை முன்னிட்டு, தஞ்சாவூரில் பாரம்பரிய முத்துப்பல்லக்கு நிகழ்ச்சி விமரிசையாக நடைபெற்றது.

500 ஆண்டுகளாக நடத்தப்பட்டு வரும் இந்த நிகழ்ச்சியை ஏராளமான மக்கள் கண்டு ரசித்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - நந்தகோபால் 28 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

மகாராஷ்ட்ரா, கோவா, கர்நாடகா, கேரளா, தமிழகம் மற்றும் புதுச்சேரியில் அடுத்த மூன்று நாட்களுக்கு மிக கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மணிக்கு 60 முதல் 70 கிலோமீட்டர் வேகத்துடன் கூடிய சூறைக்காற்றும் வீசக்கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடகிழக்கு மாநிலங்களில் மிதமானது முதல் கனமழை வரை பெய்யக்கூடும் என்றும் அந்த மையம் கூறியுள்ளது.

தமிழகத்தில் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளான நீலகிரி, கோவை, தென்காசி மாவட்டங்களில் இன்று மிக கனமழை பெய்யக்கூடும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதன் காரணமாக, நீலகிரி மாவட்டத்தில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஆட்சியர் திருமதி. லெக்ஷ்மி பவ்யா தண்ணீரு தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - ஆட்சியர் 42 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

சீனாவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் சித்தார்த் விஸ்வகர்மா அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர் 6-3, 2-6, 6-2 என்ற செட்கணக்கில் அமெரிக்காவின் **Evan Zhu**–வை வென்றார்.

இப்போட்டியில் சசிகுமார் முகுந்த்-ம் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

>>>>>><<<<<<

பெல்ஜியத்திற்கு எதிரான மூன்றாவது மகளிர் ஜூனியர் ஹாக்கிப் போட்டியில் 3-2 என்ற கோல்கணக்கில் இந்தியா வெற்றிபெற்றது.

>>>>>><<<<<<

தமிழ்நாடு ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் சேலம் அணி – திருப்பூர் அணியை எதிர்கொள்கிறது.

>>>>>><<<<<<